# தருமபுரி மாவட்டம்

## அரூர் வட்டம், போளையம்பள்ளி கிராமத்தில் அம்மா திட்ட சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், போளையம்பள்ளி கிராமத்தில் அம்மா திட்ட சிறப்பு முகாம் இன்று (21.10.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் மருத்துவ சுகாதார பணிகள் சார்பில் நிலவேம்பு குடிநீர், கால்நடை துறை, சமூக பாதுகாப்புத் துறை, ஊரக வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளின் மூலம் அமைக்கப்பட்டிருந்து கண்காட்சியினை பார்வையிட்டும், பின்னர் புதிய குடும்ப அட்டை, ஜாதி சான்று, வருமான சான்று, பட்டா சிட்டா பெயர் மாற்றம் என பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அம்மா திட்ட முகாம் தருமபுரி மாவட்டத்தில் 470 கிராமங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வாரந்தோறும் வட்டங்கள் வாரியாக கிராமங்களைத் தேர்வு செய்து தற்போது 4-வது சுற்றில் 165 கிராமமாக போளையம்பள்ளி கிராமத்தில் முகாமில் மக்களிடத்தில் மனுக்களைப் பெற்று உடனடி தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கிராமத்தில் பேரிடர் மேலாண்மைக் குழுவில் 17 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு ஒவ்வொரு சனிக்கிழமைகளில் பேரிடர் மேலாண்மை கூட்டத்தை நடத்தி வருகிறது. வயதான முதியோர்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தில் அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளில் ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் இலவசமாக சிகிச்சை பெறலாம். இளைஞர்களுக்கென தொழில் தொடங்க பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக வேளாண் சேவை மையம் தொடங்க படித்த இளைஞர்களுக்கு ரூ. 25 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இதில் ரூ. 10 இலட்சம் மானியமாகும். இவ்வேளாண் சேவை மையத்தில் விவசாயம் செய்வதற்கு தேவையான பொருட்களை மொத்தமாக வாங்கி வைத்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விடலாம். இவ்வாறு எண்ணற்ற திட்டங்கள் உள்ளன. இவற்றை படித்த இளைஞர்கள் நன்கு அறிந்துகொண்டு கடனுதவி பெற்று தொழில் தொடங்கி வாழ்க்கையில் முன்னேறலாம்.

அரசின் திட்டங்கள், பயன்கள், பொதுமக்கள் அனைவருக்கும் சென்று சேரும் வண்ணம் ஒவ்வொரு முகாம்களிலும் பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அமைக்கப்படுகிறது. தனிநபர் கழிப்பறை அமைக்க அரசு ரூ. 12 ஆயிரம் மானியம் வழங்குகிறது. அதனை பெற்று தனிநபர் கழிப்பறை அமைக்க முன்வர வேண்டும். பொதுமக்கள் தங்களுக்கு தேவையான ஜாதி, வருமானம், இருப்பிடச்சான்றிதழ்கள் பெற அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தொடர்புகொள்ளலாம். பொதுமக்களுக்கு ஏதேனும் விவரங்கள் அறிய வேண்டுமெனில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களுக்கு தங்களது புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக நுகர்வோர் உணவுப்பொருள் வழங்கல் துறையின் சார்பில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்து 55 பயனாளிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். முதியோர் உதவித்தொகை 64 மனுக்கள் பெறப்பட்டு நிலுவையில் உள்ளது.

இம்முகாமில் அரூர் கோட்டாட்சியர் திருமதி. கவிதா, வட்டாட்சியர் திரு. செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வெங்கடேஷ் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.